# FIRST INFORMATION REPORT
## முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM I
8069826

C

1. District மாவட்டம் : மதுரை   PS: காவல்நிலையம் : ஊ.த.க. பிரிவு   Year ஆண்டு : 2020   FIR No. மு.த.அ. எண் : 8/2020   Date நாள் : 3.11.2020

2. (i) Act சட்டம்: PC Act 1988 as amended   Sections பிரிவுகள்: 7 of PC Act 1988 as
(ii) Act சட்டம்: by the PC (Amendment) Act 2018.   Sections பிரிவுகள்: amended by PC
(iii) Act சட்டம்: CrPC   Sections பிரிவுகள்: (Amendment) Act 2018. & 102 CrPC
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள்   Date from நாள் முதல் : 2.11.2020   Date to நாள் வரை :
Time Period நேர அளவு :   Time from நேரம் முதல் : 19.50 hrs   Time to நேரம் வரை : 23.45 hrs.
(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 3.11.2020   Time நேரம் : 02.00 hrs.
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 3.11.2020   Time நேரம் : 03.00 hrs.

4. Type of Information : Written/ ~~Oral~~ தகவலின் வகை : எழுத்து மூலம் / ~~வாய் மொழியாக~~ எழுத்து மூலம்

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் காவல் ஆணையர் அலுவலகம், தலைமையிடம் மற்றும் ஆயுதப்படைத் துறை,
Beat Number : முறைக் காவல் எண்   (b) Address : முகவரி பிளாட் எண்-116, கற்பக நகர், 10வது தெரு, கே.புதூர், மதுரை-2
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர்   District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் திரு. R. திருமலை   (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் த/பெ ராமலிங்கம்
(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு   (d) Nationality : நாட்டினம் இந்தியன்   (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : வழங்கப்பட்ட நாள்   Place of Issue : வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : தொழில் மாவட்ட தணிக்கை ஆய்வுக்குழு அலுவலகம்   (g) Address : முகவரி மாவட்ட ஆய்வுக்குழு அலுவலகம், மதுரை.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்) 1. திரு. A. ஜான் பிரிட்டோ, வயது 45/20, த/பெ அலங்காரம், காவல் ஆய்வாளர், தலைமையிடம் மற்றும் ஆயுதப்படைத்துறை, மதுரை மற்றும் 2. திரு. S. நடராஜன் வயது 49/2020 த/பெ சுப்பிரமணியன், சிறப்பு சார்பு ஆய்வாளர் (S.S.I 1652), தலைமையிடம் மற்றும் ஆயுதப்படைத்துறை, மதுரை.

8. Reasons for delay in reporting by the complainant / Informant: குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
— தாமதம் இல்லை —

* GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved : —
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்) —

தனித்தாளில் இணைக்கப்பட்டுள்ளது

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed Smt. T.SURIYAKALA Rank INSPECTOR to take up the Investigation / Refused Investigation / transferred to PS V.A.C., MADURAI ....on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ................................ பதவி ........................ நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ................................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

3/11/20 — 3/11/2020

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court: 3.11.2020 04.30 hrs.
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: பெயர் K.Kumaraguru.
Rank: நிலை Inspector of Police VAC Madurai.

Submitted,

இன்று 03.11.2020-ம் தேதி அதிகாலை 02.00 மணிக்கு, காவல் ஆய்வாளர் K.குமரகுரு ஆகிய நான், மதுரை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்தில் அலுவலில் இருந்த போது, மதுரை மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர் திரு. இரா.திருமலை அவர்கள் மதுரை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்தில் ஆஜராகி என்னிடம் தனி அறிக்கை அளித்தார். மதுரை ஊ.த.க. பிரிவு, காவல்துணை கண்காணிப்பாளர் அவர்களின் உத்தரவின் பேரில், மேற்படி தனி அறிக்கை மற்றும் அத்துடன் ஒப்படைத்த மதுரை, குடிமைப்பொருள் மற்றும் குற்றப்புலனாய்வுத் துறை காவல் ஆய்வாளர் அலுவலகத்தில் நடத்தப்பட்ட திடீர் இணை ஆய்வு குறிப்புரை நாள் : 02.11.2020, மேலும், திடீர் இணை ஆய்வின் போது குடிமைப்பொருள் மற்றும் குற்றப்புலனாய்வுத் துறை காவல் ஆய்வாளர் திரு. A. ஜான் பிரிட்டோ அவர்களிடமிருந்து கைப்பற்றப்பட்ட லஞ்சப் பணம் ரூ.1,23,500/- மற்றும் மேற்படி அலுவலகத்தில் சோதனையின்போது நிலைய எழுத்தர் இருக்கைக்கு பின்னால் இருந்த, நிலைய எழுத்தர் என்று எழுதப்பட்ட கப்போர்டில் இருந்த பதிவேடுகளுக்கு இடையே கத்தையாக அனாமத்தாக இருந்த ரூ.3,000/- ஆக மொத்த பணம் ரூ.1,26,500/-, மேற்படி அலுவலகத்திலிருந்து கைப்பற்றப்பட்ட ஐந்து ஆவணங்கள் மற்றும் சம்பவ இடத்தில் அளித்த ஐந்து வாக்குமூலங்கள் ஆகியவற்றை பார்வையிட்டேன். தனி அறிக்கையில் உள்ள விபரம் பின்வருமாறு. அனுப்புநர்: இரா. திருமலை, துணை ஆய்வுக்குழு அலுவலர், மாவட்ட ஆய்வுக்குழு அலுவலகம், மதுரை. பெறுநர்: காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, மதுரை. ந.க. எண்.ஐ1/314/2020, நாள்: 03.11.2020. அய்யா, பொருள்: திடீர் இணை ஆய்வு - மதுரை மாவட்டம் - காவல் துறை - குடிமைப் பொருள் மற்றும் குற்றப்புலனாய்வுத் துறை - காவல் ஆய்வாளர் மதுரை மாவட்டத்தில் உள்ள ரைஸ்மில் உரிமையாளர்களிடமும், உணவுப்பொருள் விற்பனையாளர்களிடமும் இருந்து மாத மாமூல் வாங்குவதாக கிடைக்கப் பெற்ற இரகசிய தகவலின் பேரில் திடீர் இணை ஆய்வு மேற்கொள்ளப்பட்டது ரூ.1,26,500/- பணம் மற்றும் ஆவணங்கள் கைப்பற்றப்பட்டது - மேல் நடவடிக்கை எடுக்கக் கோருவது - தனி அறிக்கை அனுப்புதல் தொடர்பாக.

நேற்று 02.11.2020-ம் தேதியன்று, மதுரை, கே.புதூர், கற்பக நகர் 10 வது தெரு, பிளாட் எண். 116 - ல் உள்ள குடிமைப் பொருள் மற்றும் குற்றப்புலனாய்வுத் துறை, காவல் ஆய்வாளர் அலுவலகத்தில் மதுரை மாவட்டத்தில் உள்ள ரைஸ் மில் உரிமையாளர்களிடமும், உணவுப்பொருள் விற்பனையாளர்களிடமும் இருந்து மாத மாமூல் வாங்குவதாக கிடைக்கப் பெற்ற இரகசிய தகவலின் பேரில், மேற்படி முகவரியில் உள்ள குடிமைப்பொருள் மற்றும் குற்றப்புலனாய்வுத் துறை காவல் ஆய்வாளர் அலுவலகம் நேற்று 02.11.2020-ம் தேதி இரவு சுமார் 07.50 மணியளவில் நானும், மதுரை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு ஆய்வாளர் திரு.K.குமரகுரு அவர்களும் மற்றும் காவல் ஆளிநர்களுடன் மேற்படி அலுவலகத்தில் உள்ளே நுழைந்த போது, அலுவலகத்தின் வரவேற்பு அறையில் திரு.S. நட்சத்திரம், சிறப்பு சார்பு ஆய்வாளர் (த.கா.1652), குடிமைப் பொருள் மற்றும் குற்றப்புலனாய்வுத் துறை, மதுரை-2 என்பவர் அலுவலக பாரா பொறுப்பில் இருந்தார். மேற்படி பாராக்காவலில் இருந்த சிறப்பு சார்பு ஆய்வாளர் நட்சத்திரம் அவர்களிடம், காவல் ஆய்வாளர் திரு.ஜான்பிரிட்டோ என்பவர் குறித்து கேட்டபோது, அவர் அலுவலக வேலையாக வெளியில் சென்றிருப்பதாகவும், வந்துவிடுவார் எனவும் தெரிவித்தார். பின்னர் திரு.நட்சத்திரம் அவர்கள் காவல் ஆய்வாளரை செல்போனில் தொடர்பு கொண்டு, குடிமைப்பொருள் மற்றும் குற்றப்புலனாய்வுத் துறை அலுவலகத்திற்கு வரச்சொலவதற்காக தனது செல்போன் நம்பர் 8778201166-எண்ணிலிருந்து காவல் ஆய்வாளர் செல்போன் எண்.8300064001-க்கு தொடர்பு கொண்டார். காவல் ஆய்வாளர், திரு. நட்சத்திரம் அவர்களின் அழைப்பை எடுக்காததால் காவல் ஆய்வாளரின் ஓட்டுனர் தலைமைக் காவலர் எண். 1830 திரு.K.கனி என்பவரது செல்போன் எண். 9751015674-க்கு திரு. நட்சத்திரம் தொடர்பு கொண்டு காவல் ஆய்வாளரை உடனே குடிமைப்பொருள் மற்றும் குற்றப்புலனாய்வுத் துறை அலுவலகத்திற்கு வரச்சொன்னதின்பேரில், இரவு சுமார் 20.30 மணிக்கு காவல் ஆய்வாளர் திரு. ஜான் பிரிட்டோ என்பவர் மேற்படி அலுவலகம் வந்தார். அவரிடம், நான், என்னையும், ஊழல் தடுப்பு பிரிவு ஆய்வாளர் குமரகுரு மற்றும் காவல் ஆளிநர்களை அறிமுகம் செய்து கொணடு, ஜான் பிரிட்டோ அவர்களை விசாரணை செய்தபோது, அவர், தன்னை தனது ஓட்டுநர் தொடர்பு கொண்டு அலுவலகம் வருமாறு கூறியதின் பேரில் வந்ததாக தெரிவித்தார். மேலும், தான் 1999-ம் ஆண்டு நேரடி சார்பு ஆய்வாளராக பணியில் சேர்ந்ததாகவும், கடந்த 13.11.2018-ம் தேதி முதல் தற்போதுவரை குடிமைப்பொருள் மற்றும் குற்றப்புலனாய்வுத் துறை

அலுவலகத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருவதாகவும் தெரிவித்தார். பின்னர் மேற்படி காவல் ஆய்வாளர் திரு. ஜான்பிரிட்டோ அவர்களை சோதனை செய்தபோது, தனது பேன்ட்டின் இடது முன்பக்க பாக்கெட்டிலிருந்து இரண்டு கத்தைகளாக பணத்தை எடுத்து ஆஜர் செய்தார். அந்த பணத்தில் ஒரு கத்தையை எண்ணி பார்த்தபோது, அதில் ரூ.8,500/- இருந்தது. மற்றொரு கத்தையை எண்ணி பார்த்தபோது அதில் ரூ.25,000/- இருந்தது. பின்னர், ஜான் பிரிட்டோ அவர்கள், தனது பேன்டின் வலது பக்க முன் பாக்கெட்டிலிருந்து இரண்டு கத்தையாக பணத்தை எடுத்து ஆஜர் செய்தார். அந்த பணத்தை எண்ணி பார்த்தபோது, அதில் ஒரு கத்தையில் ரூ.50,000/- இருந்தது. மற்றொரு கத்தையை எண்ணி பார்த்தபோது அதில் ரூ.40,000/- இருந்தது. ஆக மொத்தம் ரூ.1,23,500/- குறித்து அவரிடம் விளக்கம் கேட்டபோது, அவர் மேற்படி பணம், அலுவலக செலவிற்காக பெற்றதாக தெரிவித்தார். எனவே, அந்தப்பணம் கைப்பற்றப்பட்டது. பின்னர், காவல் ஆய்வளர் ஜான் பிரிட்டோ அவர்களிடம், மேற்படி அலுவலகத்திற்கு அவர் வந்த வாகனம் குறித்து கேட்டபோது, தனது நண்பர் மதுரையைச் சேர்ந்த திரு.மோகன் என்பவரின் அடர்சிவப்பு நிற Swift VDI கார் பதிவெண். TN58 AA 9258 என்ற வாகனத்தில் வந்ததாக தெரிவித்தார். பின்னர் காவல் ஆய்வாளர் குறிப்பிட்ட மேற்படி வாகனத்தை சோதனை செய்த போது அதில் பணம் எதுவும் இல்லை. பின்னர் மேற்படி அலுவலகத்தில் பாரா பொறுப்பில் இருந்த திரு.S. நட்சத்திரம், சிறப்பு சார்பு ஆய்வாளர் (த.கா.1652), அவர்களை விசாரணை செய்தபோது, அவர் தனது சட்டை பையிலிருந்து ரூ.2,490/- ஐ எடுத்து ஆஜர் செய்தார். மேற்படி பணம் குறித்து அவரிடம் கேட்டபோது அந்தப் பணம் தனது மருத்துவ செலவிற்காக வைத்திருப்பதாக தெரிவித்ததின்பேரில் மேற்படி பணம் அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. பின்னர் மேற்படி அலுவலகத்தில் முதல்தளத்தில் உள்ள கணிணி அறையில் ஆஜரில் இருந்த திரு. K. செல்வராஜ், தலைமைக்காவலர் 1577, என்பவரை விசாரணை செய்தபோது, தான் மேற்படி அலுவலகத்தின் காவல் துணை கண்காணிப்பாளர் அலுவலகத்தில் கணிணி தட்டச்சு அலுவல் செய்து வருவதாக தெரிவித்து, தனது சட்டைபையிலிருந்து ரூ.900/- ஐ எடுத்து ஆஜர் செய்தார். மேற்படி பணம் குறித்த கேட்டபோது, தனது சொந்த செலவிற்காக அந்த பணத்தை வைத்திருப்பதாக தெரிவித்ததின்பேரில் மேற்படி பணம் அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. பின்னர் அவருடன் இருந்த விருதுநகர் மாவட்ட குடிமைப் பொருள் மற்றும் குற்றப்புலனாய்வுத் துறை சார்பு ஆய்வாளர் திரு. P. கார்த்திக்

செல்வம் என்பவரை விசாரித்தபோது, தான் மாதந்திர ஆய்வு அறிக்கை தயார் செய்வதை மேற்பார்வை செய்து கொண்டு இருப்பதாக தெரிவித்து தனது சட்டைபையிலிருந்து ரூ.200/- ஐ எடுத்து ஆஜர் செய்தார். மேற்படி பணம் குறித்த கேட்டபோது, தனது சொந்த செலவிற்காக அந்த பணத்தை வைத்திருப்பதாக தெரிவித்ததின்பேரில் மேற்படி பணம் அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. பின்னர், அவருடன் இருந்த, மதுரை மாநகர், சி-5, கரிமேடு காவல் நிலையம், சிறப்பு சார்பு ஆய்வாளர் (த.கா.1733), திரு. S. அஜீத்குமார் என்பவரை விசாரணை செய்தபோது, தான் மேற்படி அலுவலகத்தில் கடந்த 06.09.2020 வரை பணிசெய்துவிட்டு தற்போது மதுரை மாநகர் சி-5 கரிமேடு குற்றப்பிரிவு காவல் நிலையத்தில் பணிபுரிந்து வருவதாகவும், காவல் துணை கண்காணிப்பாளர், திரு. இளங்கோவன் அவர்கள் கேட்டுக் கொண்டதின்பேரில் மேற்படி அலுவலகத்தில் மாதாந்திர அறிக்கை தயார் செய்வதற்கு உதவி செய்ய வந்ததாக தெரிவித்து, அவர் தனது சட்டைபையிலிருந்து ரூ.500/- ஐ எடுத்து ஆஜர் செய்தார். மேற்படி பணம் குறித்த கேட்டபோது, தனது சொந்த செலவிற்காக அந்த பணத்தை வைத்திருப்பதாக தெரிவித்ததின்பேரில் மேற்படி பணம் அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. பின்னர் மேற்படி அலுவலகத்தில் திரு.நட்சத்திரம் அமர்ந்திருந்த, நிலைய எழுத்தர் இருக்கைக்கு பின்னால் இருந்த, நிலைய எழுத்தர் என்று எழுதப்பட்ட கப்போர்டை சோதனை செய்தபோது, அங்கிருந்த பதிவேடுகளுக்கு இடையே கத்தையாக பணம் இருந்தது. அந்த பணத்தை எண்ணிப்பார்த்தபோது ரூ.3,000/- இருந்தது. அப்பணம் குறித்து நட்சத்திரம் அவர்களிடம் கேட்டபோது, தனக்கு அந்தப்பணம் குறித்து எதுவும் தெரியாது என தெரிவித்தார். அனாமத்தாக இருந்த மேற்படி பணம் ரூ.3,000/- கைப்பற்றப்பட்டது. திடீர் இணை ஆய்வின் போது, மேற்படி அலுவலகத்தில் இருந்த அனைத்து அறைகளும் சோதனையிடப்பட்டது. பின்னர், சம்பவம் குறித்து திரு.S. நட்சத்திரம், சிறப்பு சார்பு ஆய்வாளர் (த.கா.1652), திரு. K. செல்வராஜ், தலைமைக்காவலர் 1577, திரு. P. கார்த்திக் செல்வம், சார்பு ஆய்வாளர், குடிமைப் பொருள் மற்றும் குற்றப்புலனாய்வுத் துறை, விருதுநகர் மற்றும் மதுரை மாநகர், சி-5, கரிமேடு காவல் நிலையம், சிறப்பு சார்பு ஆய்வாளர் (த.கா.1733), திரு. S. அஜீத்குமார் ஆகியோரிடம் நான் தனித்தனியாக விசாரணை செய்து அவர்களது வாக்குமூலத்தை பதிவு செயதேன். மேற்படி நபர்களின் சொந்தப்பணம் திரும்ப கொடுக்கப்பட்டது. மேற்படி சோதனையின்போது, பணம் மொத்தம் ரூ.1,26,500/- கைப்பற்றப்பட்டது. பின்னர், மேற்படி அலுவலகத்தில் பாரா பொறுப்பில் இருந்த சிறப்பு

சார்பு ஆய்வாளர் திரு.நட்சத்திரம் அவர்கள் ஐந்து ஆவணங்களை ஆஜர் செய்தார். திடீர் ஆய்வின் போது, மேற்படி மதுரை, குடிமைப்பொருள் மற்றும் குற்றப்புலனாய்வு காவல் ஆய்வாளர் அலுவலகத்தில் இருந்த பொருட்களுக்கோ, ஆவணங்களுக்கோ, உடைமைகளுக்கோ எவ்வித சேதமும் ஏற்படவில்லை. இந்த திடீர் ஆய்வு குறிப்புரை இரவு 23.45 மணிக்கு முடிக்கப்பட்டது.

மேற்படி திடீர் இணை ஆய்வு சோதனையின் போது, காவல் ஆய்வாளர் திரு. ஜான்பிரிட்டோ அவர்களிடமிருந்து கைப்பற்றப்பட்ட பணம் ரூ.1,23,500/-, அலுவலகத்தில் அனாமத்தாக இருந்த பணம் ரூ.3,000/- ஆகமொத்தம் ரூ.1,26,500/- , மேலும், மேற்படி அலுவலகத்தில் பாராக்காவலில் இருந்த சிறப்பு சார்பு ஆய்வாளர் ஆஜர் செய்த ஐந்து ஆவணங்ளான **(1)** C.S.C.I.D., MADURAI UNIT SENTRY BOOK YEAR - 2020 (பக்கம் 1 முதல் 355 வரை எழுதப்பட்டது), **(2)** C.S.C.I.D., MADURAI UNIT F.I.R. INDEX YEAR - 2020 (பக்கம் 1 முதல் 205 வரை எழுதப்பட்டது), **(3)** C.S.C.I.D., மதுரை பொதுநாட்குறிப்பு B 6905101 - 16.06.2020 செவ்வாய்கிழமை முதல் B 6905692 - 02.11.2020 Monday வரை எழுதப்பட்டது, **(4)** C.S.C.I.D., MADURAI ROUGH DUTY ROASTER (பக்கம் 1 முதல் 310-யிலும், பக்கம் 364 முதல் 368 வரை எழுதப்பட்டது) **(5)** C.S.C.I.D., MADURAI UNIT PERMANENT CASH BOOK 2019 (பக்கம் 1 முதல் 25 வரை எழுதப்பட்டது) மற்றும் (1) காவல் ஆய்வாளர் திரு. A.. ஜான் பிரிட்டோ, காவல் ஆய்வாளர், குடிமைப்பொருள் மற்றும் குற்றப்புலனாய்வுத் துறை, மதுரை (2) திரு.S. நட்சத்திரம், சிறப்பு சார்பு ஆய்வாளர் (த.கா.1652), (3) திரு. K. செல்வராஜ், தலைமைக்காவலர் 1577, (4) திரு. P. கார்த்திக் செல்வம், சார்பு ஆய்வாளர், குடிமைப் பொருள் மற்றும் குற்றப்புலனாய்வுத் துறை, விருதுநகர் மற்றும் (5) திரு. S. அஜீத்குமார், சிறப்பு சார்பு ஆய்வாளர் (த.கா.1733) சி-5, கரிமேடு காவல் நிலையம், மதுரை மாநகர் ஆகியோரை நான் தனித்தனியாக விசாரணை செய்து பெற்ற வாக்குமூலங்கள் ஆகியவற்றை இணைத்து (1) திரு. A. ஜான் பிரிட்டோ, காவல் ஆய்வாளர், குடிமைப் பொருள் மற்றும் குற்றப்புலனாய்வுத் துறை, மதுரை மற்றும் (2) திரு.S. நட்சத்திரம், சிறப்பு சார்பு ஆய்வாளர் (த.கா.1652), குடிமைப் பொருள் மற்றும் குற்றப்புலனாய்வுத் துறை, மதுரை ஆகியோர் மீது மேல் நடவடிக்கை எடுக்க தங்களிடம் புகார் மனுவாக அளிக்கின்றேன். ஒப்பம்/- XXXXX 03.11.20 (இரா. திருமலை) துணை ஆய்வுக்குழு

அலுவலர், மாவட்ட ஆய்வுக்குழு அலுவலகம், மதுரை. இணைப்பு : 1.திடீர் இணை ஆய்வு குறிப்புரை, நாள் 02.11.2020. 2. பதிவு செய்யப்பட்ட வாக்குமூலங்கள்- ஐந்து. 3. கைப்பற்றப்பட்ட ஆவணங்கள் - ஐந்து. 4. ரொக்கத் தொகை ரூ.1,26,500/-.

Sir, Received this report today (03.11.2020) at 02.00 hrs along with Joint Surprise Check Proceedings, Dated:02.11.2020, Five statements, Seized Five documents, Cash Rs.1,26,500/- . After obtaining permission from the Superior Officers, I (K.Kumaraguru, Inspector of Police, V&AC, Madurai) registered a case in Madurai V&AC Crime No.8/2020 u/s 7 of Prevention of Corruption Act 1988 as amended by Prevention of Corruption (Amendment) Act 2018 and 102 CrPC on 03.11.2020 at 03.00 hrs. Sd/-XXXXX (K.Kumaraguru), Inspector of Police, V&AC, 03.11.2020.

The original FIR along with report of Tr. R. Thirumalai, Joint Surprise Check Proceedings Dated: 02.11.2020 and 5 statements are submitted to the Hon'ble Special Judge, Special Court for the Trial of Cases under PC Act, Madurai and other copies were sent to the officers concerned.

3/11/2020
[K.KUMARAGURU]
Inspector of Police,
V&AC,
Madurai.